செ.வெ.எண் -116

# அரசு செய்திக் குறிப்பு – 18.2.2009

இன்றைய தலைமுறையினரும், எதிர்காலத் தலைமுறையினரும் எந்தவித சிரமமுமின்றி எளிய முறையில் பயன்பெற வேண்டும் என்பதற்காகத் தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது அரசின் விருப்புரிமை அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. எந்தவிதக் கட்டாயமும் கிடையாது. நாட்டுடைமையாக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட மரபுரிமையாளர்கள் – அவர்களுக்குக் கிடைத்துவரும் ''ராயல்டி'' தொகை கிடைக்காமல் போய் விடும் என்பதற்காக ஒப்புதல் தரவில்லையெனில்; தொடர் நடவடிக்கை எடுக்காமல் கைவிட்டு விடுவதை அரசு வழக்கமாய் பின்பற்றி வருகிறது. உதாரணமாக மூதறிஞர் இராஜாஜி, உ.வே.சா., அகிலன், கவியோகி சுத்தானந்த பாரதியார், கிருபானந்த வாரியார் ஆகியோரது நூல்களை நாட்டுடைமையாக்கிட கடந்த காலத்தில் அரசினால் அறிவிக்கப்பட்டு – பின்னர் சம்பந்தப்பட்ட மரபுரிமையாளர்கள் நாட்டுடைமையாக்கிட ஒப்புதல் தரவில்லை என்பதால், மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது. எனவே தற்போது நிதி நிலை அறிக்கையில் நாட்டுடைமையாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலிலே உள்ள சில நூலாசிரியர்களின் மரபுரிமையர், அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க ஒப்புதல் தரவில்லை என்பதால் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறை இப்போதும் பொருந்தும்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9